[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026

3rd Term Examination - 2026

கணக்கீடு - I Accounting - I	33 T I	One Hour
	சுட்டெண்:-.....	Grade – 12 (2027)

அறிவுறுத்தல்கள்:

- எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1 தொடக்கம் 15** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையை தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **16 தொடக்கம் 25** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள **உரிய கூட்டினுள் தெளிவாக** எழுதுக.
- செய்நிரலாக்கத்தகா (Non-Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

	ஓப்பம்	குறியீட்டென்
1 ஆம் பரீட்சகர்		
2 ஆம் பரீட்சகர்		
மேலதிக பிரதம பரீட்சகர்		
ஏண்கணிதப் பரீட்சகர்		
பிரதம பரீட்சகர்		

வினாத்தாள் I இற்கானது	
வினா இல	புள்ளிகள்
01-15	
16-25	
மொத்தம்	

01,02 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக:

வணிக நிறுவனம் ஒன்றில் 2026 மார்ச் முதல் வாரத்தில் நடத்த கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:

- ரூ. 400 000 கிரயமான பொருட்கள் ரூ. 580 000 ற்கு கடனுக்கு விற்கப்பட்டுள்ளன.
- சென்மதியாளரது ரூ. 400 000 கடன் தொகையினை தீர்ப்பதற்கு உரிமையாளர் தனது சொந்த பணத்தொகை ரூ. 360 000 செலுத்தி கடன் முழுவதும் தீர்த்துள்ளார்.
- ரூ. 30 000 கிரயமான பண்டங்கள் வழங்குனருக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளது.
- மின்கட்டணத்திற்காக ரூ. 50 000 காசு கொடுப்பனவுசெய்யப்பட்டது.

01. குறித்த காலப்பகுதியில் வணிகத்தின் சொத்து மற்றும் பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதியில் ஏற்பட்டிருக்கக் கூடிய தேறிய தாக்கமாக அமைவது:

(1) ரூ. 260 000 ஆல் குறையும் ரூ. 430 000 ஆல் குறையும்
(2) ரூ. 100 000 ஆல் அதிகரிக்கும் ரூ. 390 000 ஆல் குறையும்
(3) ரூ. 100 000 ஆல் அதிகரிக்கும ரூ. 430 000 ஆல் குறையும்
(4) ரூ. 130 000 ஆல் அதிகரிக்கும் ரூ. 400 000 ஆல் குறையும்
(5) ரூ. 150 000 ஆல் அதிகரிக்கும் ரூ. 430 000 ஆல் குறையும் (.....)

02. குறித்த காலப்பகுதியில் உரிமையாண்மையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு மற்றும் இலாபம் ஆகியன முறையே:

(1) ரூ. 170 000 ரூ. 170 000
(2) ரூ. 530 000 ரூ. 170 000
(3) ரூ. 530 000 ரூ. 130 000
(4) ரூ. 530 000 ரூ. 220 000
(5) ரூ. 170 000 ரூ. 130 000 (.....)

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

Past Papers Wiki

03. வணிகமொன்று வணிக வங்கியுடன் மேற்கொண்டுள்ள கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்கள் வருமாறு:

- 31.01.2026 இல் உள்ள வங்கி கூற்று மீதி ரூ. 240 000
- ஜனவரி மாதம் மின்சாரக்கட்டணம் தொடர்பாக செலுத்திய காசோலை ரூ. 21 000 ஆகும், இது காசுகட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 12 000 ஆக பதியப்பட்டிருந்தது.
- வங்கி கூற்றில் காணப்பட்ட வருமதியாளர் ஒருவரது நேரடி வைப்பு ரூ. 18 000 இது காசுக்கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.
- ஜனவரி மாதத்தில் வைப்பு செய்திருந்த போது வங்கியால் மறுக்கப்பட்டிருந்த ரூ. 24,000 காசேலை தொடர்பான பதிவு காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கில் இடம்பெற்றிருக்கவில்லை.

காசோலை தொடர்பான விபரம்

2026 ஜனவரி மாதம் எழுதி வழங்கியவற்றில் மாத இறுதிவரை மாற்றப்படாதவை ரூ. 35 000
2026 ஜனவரி மாதம் வைப்பிலிடப்பட்டவற்றில் மாத இறுதிவரை வசூலிக்காதவை ரூ. 70 000
31.01.2026 இல் உள்ளவாறான காசுக்கட்டுப்பாட்டு கணக்கின் திருத்திய மீதியும் திருத்தம் செய்யுமுன் உள்ளவாறான மீதியும் முறையே:

(1) ரூ. 290 000, ரூ. 275 000 (2) ரூ. 275 000, ரூ. 242 000
(3) ரூ. 270 000, ரூ. 290 000 (4) ரூ. 205 000, ரூ. 220 000
(5) ரூ. 275 000, ரூ. 290 000 (.....

04. வணிக நிறுவனமொன்றினது 31.03.2026 இல் முடிந்த வருட பரீட்சை மீதி சமப்படாமையால் ஆய்வு ஒன்றை மேற்கொண்டு பின்வரும் வழுக்கள் இனம் கண்டு கொள்ளப்பட்டது. பரீட்சை மீதியினைப்பயன்படுத்தி ஆண்டிற்கான வருமானக்கூற்றானது தயாரிக்கப்படுகின்றது எனக்கொள்க.

- வணிகத்தால் அதன் ஊழியருக்கு செலுத்திய கடன் தொகை ரூ. 60 000 ஆனது உரிய ஊழியர்கடன் கணக்கில் ரூ. 6 000 பதியப்பட்டிருந்தது எனினும் இது காசுக்கணக்கில் சரியாக பதிவிடப்பட்டிருந்தது.
- தரகு வருமானக்கணக்கின் மீதி ரூ. 12 000, இது பரீட்சை மீதிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.
- வெளித்திம்பல் நாளேட்டு மொத்தம் ரூ. 23 000 உரிய பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றப்பட்ட போது ரூ. 32 000 ஆக பதியப்பட்டிருந்தது.
- கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசு ரூ. 180 000 ஆனது வருமதியாளர் கணக்கில் வரவில் பதிவிடப்பட்டுள்ளது, ஆயினும் காசு கணக்கில் சரியாக பதிவிடப்பட்டிருந்தது.

மேற் குறித்த வழுக்கள் காரணமாக பரீட்சை மீதியில் ஏற்பட்டிருக்க கூடிய தொங்கல் கணக்கு மீதியும் அத்தகைய வழுக்கள் காரணமாக இலாபத்தில் ஏற்பட்டிருக்க கூடிய அதிகரிப்பு /குறைவு தொகையும் முறையே:

(1) ரூ. 42 000 வரவு, ரூ. 3 000 குறைவு.
(2) ரூ. 42 000 செலவு, ரூ. 3 000 குறைவு.
(3) ரூ. 42 000 செலவு, ரூ. 3 000 அதிகம்.
(4) ரூ. 42 000 வரவு, ரூ. 3 000 அதிகம்.
(5) ரூ. 66 000 வரவு, ரூ. 21 000 அதிகம். (.....)

05. சாலமோன் வணிகத்தினது துணைப்பேரேட்டு கடன்கொடுத்தோர் தொடர்பான பட்டியல் மீதி ரூ. 180 000 ஆக காணப்பட்டது. அதே தினத்தில் பொதுப்பேரேட்டு கட்டுப்பாட்டு கணக்கு மீதி வேறு ஒரு தொகையை கொண்டிருந்தது. இதற்கான காரணங்கள் பின்வருமாறு:

- கொள்வனவு நாளேட்டு மொத்தம் ரூ. 30 000 குறைத்து பெறுமதியிடப்பட்டிருந்தது.
- அமுதா என்ற வழங்குனர் கணக்கின் செலவு மீதி ரூ. 6 000 பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- சென்மதியாளரால் விதிக்கப்பட்ட தாமதக்கடன் வட்டி ரூ. 2 000 எந்தவொரு ஏடுகளிலும் பதியப்பட்டிருக்கவில்லை.
- பெற்ற கழிவு நிரல் மொத்தம் ரூ. 12 000 பெற்ற கழிவு கணக்கில் பதியப்பட்டிருந்த போதும் உரியகட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

மேற்குறிப்பிடப்பட்ட வழுக்கள் திருத்தம் செய்யும் முன்னரும் திருத்தம் செய்த பின்னரும் உள்ளவாறான கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதிகள் முறையே:

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

(1) ரூ. 168 000, ரூ. 188 000
(2) ரூ. 188 000, ரூ. 168 000
(3) ரூ. 172 000, ரூ. 152 000
(4) ரூ. 184 000, ரூ. 140 000
(5) ரூ. 152 000, ரூ. 172 000 (.....)

06. யாகு வணிகம் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது, 31.03.2026 இல் முடிந்த வருடத்திற்கான தகவல்கள் வருமாறு:

தகவல்கள்	**ரூ. 000 ல்**
பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம்	500
உற்பத்தி மேந்தலைகள்	600
மூலப்பொருள் இருப்பு அதிகரிப்பு	100
குறைவேலை இருப்பு குறைவு (உற்பத்திக் கிரயத்தில்)	150
முடிவுப்பொருள் இருப்பு அதிகரிப்பு	300
விற்பனைகள்	2100

மேலதிக தகவல்கள்:

- மூலக்கிரயத்தினுள் மூலப்பொருள் மற்றும் கூலிக்கிரயம் மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- விற்பனைக்கிரயத்தில் வணிகம் 40% இலாபம் சேர்த்து விற்பனையை மேற்கொள்கின்றது.

31.03.2026 இல் முடிந்த ஆண்டிற்கான நேர்க் கூலிக்கிரயம் மற்றும் உற்பத்திக்கிரயம் ஆகியன முறையே:

(1) ரூ. 1800 000, ரூ. 550 000 (2) ரூ. 1800 000, ரூ. 650 000
(3) ரூ. 650 000, ரூ. 1800 000 (4) ரூ. 1200 000, ரூ. 300 000
(5) ரூ. 550 000, ரூ. 1800 000 (.....)

07. STAR விளையாட்டுக் கழகத்தில் மாதாந்தம் ரூ. 100 சந்தா செலுத்தக்கூடிய 100 அங்கத்தவர்கள் 01.04.2025 இல் காணப்பட்டனர்.

திகதி	**31.03.2026 இல் உள்ளவாறான**	**31.03.2025 இல் உள்ளவாறான**
நிலுவை சந்தா விபரம்	20 பேர் 5 மாதங்கள்	30 பேர் 3 மாதங்கள்
முற்பணச்சந்தா விபரம்	15 பேர் 2 மாதங்கள்	10 பேர் 4 மாதங்கள்

10 அங்கத்தவர்கள் 01.10.2025 இல் புதிதாக இணைந்த போது நடப்பு வருடத்திற்குரிய 6 மாத சந்தாக்கட்டணத்தை காசாக செலுத்தியுள்ளனர்.

கழகத்தால் 31.03.2026 இல் முடிந்த வருட காலத்தில் காசாக பெறப்பட்டுள்ள சந்தா தொகை:

(1) ரூ. 128 000 (2) ரூ. 122 000 (3) ரூ. 124 000
(4) ரூ. 118 000 (5) ரூ. 108 000 (.....)

8 ஆம் 9 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக:

சாமி,சங்கர் ஆகியோர் இலாபநட்டங்களை 3:2 என பங்கீடு செய்யும் பங்குடமை ஒன்றின் பங்காளர்கள்.

- இவர்களது பங்குடமையில் 01.04.2025 இல் உள்ளவாறான மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள் விபரம் வருமாறு:

பங்காளர்கள்	**மூலதன கணக்கு மீதி ரூ. 000ல்**	**நடைமுறை கணக்கு மீதி ரூ. 000ல்**
சாமி	3 000	300
சங்கர்	2 000	(200)

- பங்காளர்கள் ஒவ்வொருவரது மூலதன மீதிகளுக்கு வருட வட்டி 10% ஆகும்.
- பங்காளர் ஒவ்வொரு வரும் மாதாந்தம் ரூ. 5 000 சம்பளம் பெறமுடியும்.
- 31.03.2026 இல் சந்திரன் என்பவர் ரூ. 1600 000 பணத்தை முதலிட்டு பங்குடமையின் புதிய பங்காளராக இணைத்துக் கொள்ளப்பட்டார், அன்றில் இருந்து புதிய இலாப நட்ட விகிதம் சாமி,சங்கர்,சந்திரன் ஆகியோருக்கு 2:2:1 என மாற்றப்பட்டதோடு ஏனைய ஒப்பந்தங்கள் தொடர்ந்தும் பின்பற்றப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது,

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

பங்காளர் இணைந்த போது பங்குடமையின் நன்மதிப்பானது ரூ. 500 000 மதிப்பிடப்பட்டதோடு இத்தொகை பங்காளர் மூலதன கணக்கின் ஊடாக சீராக்கம் செய்யப்பட்டது.

- 31.03.2026 இல் முடிந்த வருடத்திற்கான தேறிய இலாபம் ரூ. 780 000 ஆகும்.

08. 31.03.2026 இல் உள்ளவாறான சங்கரின் நடைமுறை கணக்கு மீதி:

(1) ரூ. 524 000 (2) ரூ. 124 000 (3) ரூ. 92 000
(4) ரூ. 324 000 (5) ரூ. 756 000 (.....)

09. 31.03.2026 இல் உள்ளவாறான பங்குடமையின் மொத்த உரிமைத்துவப் பெறுமதி:

(1) ரூ. 880 000 (2) ரூ. 4 780 000 (3) ரூ. 6 600 000
(4) ரூ. 7 480 000 (5) ரூ. 7 880 000 (.....)

10. அனர்த்தம் ஒன்றின் காரணமாக சிம்பு வணிகத்தில் 31.03.2026 இல் காணப்பட்ட இருப்புக்கள் அனைத்தும் முற்றாக அழிவடைந்துள்ளது. வணிக ஏடுகளில் இருந்து பெறக்கூடிய தகவல்கள் வருமாறு:

சொத்துக்கள்	**31.03.2026 இல்**	**31.03.2025 இல்**
வியாபார இருப்புக்கள்	?	ரூ. 80 000
கடன்பட்டோர்	ரூ.180 000	ரூ. 120 000

- 31.03.2026 இல் வியாபார வருமதியாளரிடம் இருந்து பெற்ற காசுத் தொகை ரூ. 1 140 000,
- குறித்த வருடத்தில் வணிகத்தால் காசு கொள்வனவுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆண்டிற்கான காசு கொள்வனவு ரூ. 930 000 ஆகும்.
- வணிகம் விற்பனை பெறுமதியில் 20% இலாபத்துடன் பண்டங்கள் விற்பனை செய்கின்றது.

31.03.2026 இல் அழிவடைந்துள்ள பண்டங்களின் பெறுமதி:

(1) ரூ. 10 000 (2) ரூ. 50 000 (3) ரூ. 110 000
(4) ரூ. 146 000 (5) ரூ. 164 000 (.....)

11. அமுதா வணிகத்தின் 31.03.2026 இல் முடிந்த வருடத்திற்கான வருமானக் கூற்று தயாரித்த போது மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் ஆகியன முறையே ரூ. 260 000, ரூ. 180 000 ஆக பெறப்பட்டது. எனினும் அதன் பின்னர் கீழ்வரும் விடயங்கள் இலாபக்கணிப்பீட்டின் போது கருத்திற் கொள்ளப்படவில்லை என்பது அறியப்பட்டது.

- ரூ. 50 000 பெறுமதியான செலவுத்தாள் ஒன்று உரிய நாளேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.
- நிலுவையாகவுள்ள வாடகைக் கட்டணம் ரூ. 20 000 எந்த ஏடுகளில் பதிவிடப்படாது காணப்பட்டது.
- உட்சுமை கூலி மற்றும் வெளிச்சுமை கூலி ஆகியன முறையே ரூ. 15 000, ரூ. 5 000 இவை எந்த ஏடுகளிலும் பதிவிடப்படவில்லை.

மேற் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீள கருத்திற் கொள்ளப்பட்டால் பெறப்படக்கூடிய சரியான மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் முறையே:

(1) ரூ. 195 000, ரூ. 90 000 (2) ரூ. 159 000, ரூ. 90 000
(3) ரூ. 225 000, ரூ. 130 000 (4) ரூ. 195 000, ரூ. 130 000
(5) ரூ. 295 000, ரூ. 190 000 (.....)

12. வணிக நிறுவனமொன்று தனது வருடாந்த நிதிக் கூற்றை தயாரித்த போது கீழ் குறிப்பிடப்படும் சீராக்கங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன

(1) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்கு வருடாந்த பெறுமானத்தேய்வுத் தொகை ஒரு செலவாக இனம் காணப்பட்டுள்ளது.
(2) இருப்பின் கிரயத்திலும் பார்க்க அதன் தேறிய தேறக்கூடிய பெறுமதி குறைவாக இருந்தமையால் கிரயத்தை குறைத்து ஒரு சொத்தாக இனம் காணப்பட்டது.

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

(3) 12 மாத காலத்திற்கான வாடகைத் தொகை காசாக பெறப்பட்டிருந்த போதும் 6 மாதத்திற்கான வாடகை மட்டுமே குறித்த நிதிவருடத்தில் வருமானமாக இனம் காணப்பட்டது.

மேற் குறிப்பிடப்பட்ட மூன்று சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டமைக்கு **பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களின்** சரியான தொகுதி முறையே:

(1) இணைதல், தேறல் மற்றும் பாதுகாப்பு.
(2) இணைதல், பாதுகாப்பு மற்றும் அட்டுறு.
(3) இணைதல், பாதுகாப்பு மற்றும் தேறல்.
(4) தேறல், பாதுகாப்பு மற்றும் இணைதல்.
(5) அட்டுறு, முன் எச்சரிக்கை மற்றும் தேறல். (.....)

13. தனியுடமை வணிக நிறுவனம் ஒன்றினது ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு:

விபரம்	31.03.2026(ரூ.)	31.03.2025(ரூ.)
இருப்புக்கள்	70 000	100 000
கடன்வருமதியாளர்	80 000	50 000
கடன் சென்மதியாளர்	20 000	40 000
ஆதனம்பொறி மற்றும் உபகரணம்(கொ/செ/மீதி)	240 000	300 000
சென்மதி மின்கட்டணம்	5 000	8 000

31.03.2026 இல் இடம்பெற்றிருந்த காசு கொடுப்பனவு மற்றும் பெறுவனவு விபரம்:

- வருமதியாளரிடம் இருந்து பெற்றகாசு ரூ. 420 000
- கடன் சென்மதியாளருக்கு செலுத்தியது ரூ. 290 000
- செலுத்தியமின்கட்டணம் ரூ. 43 000
- ஆண்டு காலத்தில் ஆதனம்பொறி மற்றும் உபகரணம் என்பனவற்றில் கொள்வனவு மற்றும் விற்பனை எவையும் இடம் பெற்றிருக்கவில்லை.

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாபம்/நட்டம்:

(1) ரூ. 10 000 இலாபம். (2) ரூ. 50 000 இலாபம். (3) ரூ. 10 000 நட்டம்.
(4) ரூ. 16 000 இலாபம். (5) ரூ. 16 000 நட்டம். (.....)

14. அமுது வணிகத்தினது 31.03.2026 இல் முடிந்த வருடகால தகவல்கள் வருமாறு:

கடன்விற்பனைகள்(இது மொத்த விற்பனையில் 70% ஆகும்)	ரூ. 490 000
கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டட வாடகை	ரூ. 60 000
(31.03.2026இல் நிலுவையாக காணப்பட்ட வாடகை ரூ. 30 000 ஆகும்)	
விற்பனை திரும்பல்கள்	ரூ. 100 000
பெற்ற நிலையான வைப்பு வட்டி	ரூ. 20 000

விற்பனை பெறுமதியில் மொத்த இலாப வீதம் 40% ஆகும்.

31.03.2026 இல் முடிந்த வருடத்திற்கான மொத்த வருமானம் மற்றும் மொத்த செலவு ஆகியன முறையே:

(1) ரூ. 680 000, ரூ. 450 000 (2) ரூ. 620 000, ரூ. 510 000
(3) ரூ. 580 000, ரூ. 420 000 (4) ரூ. 620 000, ரூ. 480 000
(5) ரூ. 620 000, ரூ. 450 000 (.....)

15. யது கம்பனி தனது நிறுவனத்தினது ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் 10% ஐ EPF ற்காக கழித்துக்கொண்டு உரிய மாதத்தில் ஊழியருக்கான கொடுப்பனவை மேற்கொண்டு வருகின்றது, மேலும் நிறுவனம் 15% EPF தொடர்பான தனது பங்களிப்பினையும் சேர்த்து மாதாந்த மொத்த EPF தொகையை மத்திய வங்கிக்கு தொடரும் மாதம் 5ஆம் திகதிக்குள் செலுத்திவருகின்றது, கம்பனி 2026 பெப்ரவரி மாதம் தேறிய சம்பளத்தொகையாக ரூ. 72 000 ஐ ஊழியர்களுக்கு செலுத்தியுள்ளது.
கம்பனியின் 2026 பெப்ரவரி மாத ஊழியர் தொடர்பான மொத்த செலவுத் தொகை:

(1) ரூ. 110 000 (2) ரூ. 88 000 (3) ரூ. 92 000
(4) ரூ. 207 000 (5) ரூ. 115 000 (.....)

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

Past Papers Wiki

16 முதல் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையை அதற்கான புள்ளிக் கோட்டில் எழுதுக:

16,17,18 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப்பயன்படுத்துக:
சில்லறை வணிகமான சுபாஷ் ரேடர்ஸ் ஆனது ரூ. 500 000 காசினை மூலதனமாக முதலீடு செய்து 01.03.2026 இல் தொடக்கப்பட்டது. இவ் வணிகமானது பெறுமதி சேர் வரிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2026 மார்ச் மாதத்தில் சுபாஷ் ரேடர்சினால் மேற்கொள்ளப்பட்டவையாகும்.

A - அலன் ரேடர்சிடம் இருந்து 10% vat உள்ளடங்கலாக ரூ. 550 000ற்கு கடனுக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
B – அலன் ரேடர்சிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூ 88 000 ஆனவை திருப்பியனுப்பப்பட்டுள்ளது(ரூ. 8 000 vat உட்பட)
C - ரூ 660 000 ற்கு பொருட்கள் காசிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது(vat ரூ. 60 000 உட்பட) இப் பொருட்களது கிரயம் ரூ. 400 000 ஆகும்.
D – அலன் ரேடர்ஸ் இற்கு ரூ. 200 000 கடன் தொகை தீர்ப்பதற்கு ரூ. 12 000 கழிவு நீக்கிய பின் மிகுதி காசு கொடுப்பனவு செய்யப்பட்டது.

16. அலன் ரேடர்சின் மூல ஏடுகளில் A,B மற்றும் D ஆகிய கொடுக்கல் வாங்கல்களை முறையாக பதிவிடுவதற்கு பயன்படுத்தும் மூல ஆவணங்களை குறிப்பிடுக:

A - .....
B - .....
D - .....

17. சுபாஷ் ரேடர்சின் பொதுப்பேரேட்டில் கொடுக்கல் வாங்கல் c தொடர்பான இரட்டைப்பதிவைக் குறிப்பிடுக:

.....
.....
.....

18. சுபாஷ் ரேடர்சின் புத்தகங்களில் 31.03.2026 இல் உள்ளவாறான பின்வரும் மீதிகளைத் தருக:
(அ) vat கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. .....
(ஆ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. .....

19. பின்வரும் பேரேட்டுக்கணக்குகள் ஒவ்வொன்றுக்குமான கணக்கு வகையினைக் குறிப்பிடுக:

பேரேட்டுக் கணக்குகள்	**கணக்கு வகை**
A – விற்பனைத்திரும்பல் கணக்கு	.....
B – கொடுத்த கழிவு கணக்கு	.....
C – ஐயக்கடன் ஒதுக்கீட்டுக் கணக்கு	.....
D – முற்பண வாடகை வருமானம்	.....

20. கீழே தரப்படும் ஒவ்வொரு தனிதனி நிலைமைகளையும் குறித்து நிற்கும் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக:

	நிலைமைகள்	**எண்ணக்கருக்கள்**
A	உரிமையாளர் தனக்கு சொந்தமான ரூ. 200 000 பெறுமதியான கணணி ஒன்றை வணிகப் பாவணைக்காக வழங்கியுள்ளார்	.....
B	நிதிக் கூற்றுக்கள் வருடாந்த அடிப்படையில் தயாரித்து முன்வைக்கப்படுகின்றது.	.....
C	ஊழியர்களது கல்வி தகமை மற்றும் சேவைக்காலம் ஆகியன ஏடுகளில் கணக்கீட்டுப் பதிவிற்கு உட்படுத்தப்படுவதில்லை.	.....

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

D	கடன் வருமதியாளர் மற்றும் சென்மதியாளர் மீதிகள் நிதிநிலைக் கூற்றில் நடைமுறைச் சொத்தாகவும் நடைமுறைப் பொறுப்பாகவும் வகைப்படுத்தி இனம் காணப்படுவது.	……..

21. வணிக நிறுவனம் ஒன்றினது 31.03.2026 முடிவடையும் வருடத்தில் இடம் பெற்றுள்ள பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்கல் மற்றும் சீராக்கம் ஆகியன இவ்வணிகத்தின் உரிமையாண்மையை அதிகரித்தால் (I) எனவும் குறைத்தால் (D) எனவும் பெறுமதியுடன் குறிப்பிடுக:

	கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சீராக்கம்	I/D	**பெறுமதி(ரூ.)**
A	01.04.2025 இல் காணப்பட்ட ரூ. 400 000 ஆன 12% வங்கிகடனுக்கு 31.03.2026 முடிந்த ஆண்டில் செலுத்தப்பட்ட வட்டி ரூ. 40 000 ஆகும்.		
B	01.04.2025 இல் காணப்பட்ட முற்பண வாடகை ரூ. 15 000 ஆகும். 31.03.2026 முடிந்த ஆண்டிற்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட வாடகைக்கட்டணம் ரூ. 35 000 ஆகும்.		
C	31.03.2026 முடிந்த ஆண்டில் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூ. 50 000 ஆகும். இதனுள் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமையாளரது ஆயுள்காப்புறுதி கட்டணத் தொகை ரூ. 18 000 ஆகும்.		
D	01.08.2025 இல் வணிக கட்டடமானது வெளிநபர் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கிய போது அன்றே பெறப்பட்டுள்ள வருடாந்த வாடகைத் தொகை ரூ. 60 000 ஆகும்.		

22. மாகி மொத்த வியாபாரிகளது சில்லறைக் காசு கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட்ட விடயங்கள் வருமாறு:

31.03.2026 இல் உள்ள சில்லறைக் காசு கணக்கு மீதி ரூ. 900 ஆகும்.
2026 ஏப்ரல் மாத சிறு செலவுகளின் மொத்தம் ரூ. 3 900 ஆகும், இது மார்ச் மாத செலவை விடவும் ரூ. 800 அதிகமானதாகும்.
மீள்நிரப்பிய பின்னர் ஏப்ரல் மாத தொடக்கத்திலுள்ள வசக்கட்டுத் தொகையானது, மார்ச் மாத வசக்கட்டுத் தொகையில் 25% அதிகமானதாக காணப்பட்டது.

வேண்டப்படுவது:

(அ) 01 மார்ச் 2026 இல் உள்ளவாறான வசக்கட்டுத் தொகை. ரூ. ……..
(ஆ) 30 ஏப்ரல் 2026 இல் உள்ள சில்லறைக் காசு மீதி. ரூ. ……..

23. தளபாடங்களை உற்பத்தி செய்கின்ற வணிகமொன்றில் இருந்து பெறப்பட்டுள்ள கீழ்வரும் கிரய உருப்படிகள் ஒவ்வொன்றும் நேர்க்கிரயமா/நேரில்கிரயமா என குறிப்பிடுக:

கிரய உருப்படிகள்	**நேர்/நேரில்**
A – உற்பத்தி இயந்திர இயக்குனரின் மாதாந்தக் கூலிக்கிரயம்	……..
B – உற்பத்தி இயந்திரத்தின் வருடாந்த பெறுமானத் தேய்வு	……..
C – அரியப்பட்ட மரப்பலகை கிரயம்	……..
D – உற்பத்தி முகாமையாளரது மாதாந்தக் கூலிக்கிரயம்	……..

24. நிதியறிக்கையினைத் தயாரிக்கும் போது செயற்படுத்தப்பட்டுள்ள பின்வரும் ஒவ்வொரு விடயத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது மீறப்பட்டுள்ள கணக்கீட்டு ஏண்ணக்கருக்களைக் குறிப்பிடுக:

	விடயங்கள்	**எண்ணக்கருக்கள்**
A	மீள்மதிப்பீட்டின் போது வரலாற்றுக்கிரயத்தை தவிர்த்தல்	……
B	பயன்படுத்தும் கொள்கையை மாற்றாமல் அதனையே தொடர்ச்சியாக பயன்படுத்திவருதல்.	……
C	ஏற்றுக்கொள்ள கூடிய பொருத்தமான காலப்பகுதிக்குள் நிதி அறிக்கையை தயாரித்து வெளியிடல்	……

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

D	சட்டரீதியான உரிமையை கொண்டிராத போதும் வணிகமானது தனது கட்டுப்பாட்டில் உள்ள ஒரு சொத்தை நிதி நிலைக்கூற்றில் சொத்தாக இனம் கண்டு வெளிப்படுத்தல்.	.....

25. வணிக நிறுவனமொன்றினது கடன்வருமதியாளர் கணக்கு மீதி மற்றும் ஐயக்கடன் ஒதுக்கு சதவீதம் தொடர்பான விபரம் வருமாறு:

ஆண்டு	**வருமதியாளர் கொ/செல்/மீதி**	**வருமதியாளர் மீதியில் ஐயக்கடன் சதவீதம்**
2025 மார்ச் 31இல் உள்ளவாறான	138 000	8%
2026 மார்ச் 31 இல் உள்ளவாறான	95 000	5%

31.03.2026 இல் பதிவழிக்கப்பட்டுள்ள அறவிடமுடியாத கடன் தொகை 18 000 ஆகும்.

வேண்டப்படுவது:

(அ) 31.03.2026 இல் முடிந்த ஆண்டுக்கான அறவிடமுடியாத, ஐயக்கடன் செலவுத் தொகை.
ரூ. .....

(ஆ) 31.03.2026 இல் முடிந்த ஆண்டில் கடன்பட்டோர் மீதியில் ஏற்பட்டுள்ள குறைவு
ரூ. .....

****

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026

3rd Term Examination - 2026

கணக்கீடு - II Accounting - II	33 T II	Two Hours (Additional time – 10 Minutes)
	சுட்டெண்:-.....	Grade – 12 (2027)

1,2 ஆம் வினாக்கள் உட்பட 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக:

01. அமரன், சிவா, பாலு ஆகியோர் பங்குடமை ஒன்றினது பங்காளர்களாவர் இப்பங்குடமையின் 31.03.2026 இல் முடிந்த வருடத்திற்கான பரீட்சைமீதி

விபரம்	வரவு ரூ. 000'	செலவு ரூ. 000'
மூலதனக்கணக்கு மீதி – அமரன்		500
- சிவா		300
- பாலு		200
01.04.2025 நடைமுறைக்கணக்கு மீதி – அமரன்	40	
- சிவா		50
- பாலு		10
விற்பனைகள்		1 117
விற்பனைக்கிரயம்	540	
ஊழியர் சம்பளம்	150	
மின்கட்டணம்	48	
விளம்பரக்கட்டணம்	50	
கடன்படுனர்	60	
கடன்கொடுத்தோர்		120
சிவாகடன்		200
காப்புறுதி	42	
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்(கிரயம்)	600	
ஆதனம் பொறி மற்றும் உபகரணம் திரண்ட தேய்வு		180
31.03.2026 இல் இருப்பு	100	
தரகு வருமானம்		24
காசு மீதி	1 071	
	2 701	2 701

மேலதிக தகவல்கள்:-

01. பங்குடமையில் பங்காளரது உடன்படிக்கை வருமாறு:

- மூலதன மீதிகளுக்கு வட்டி வருடாந்தம் 10% ஆகும்.
- பங்காளர் சிவா மற்றும் பாலு ஆகியோரது மாதாந்த சம்பளம் முறையே ரூ. 5 000, ரூ. 10 000 ஆகும்.
- இலாப நட்டம் சமமாக பகிரப்படும்.

02. பங்காளர் சிவா, பாலு ஆகியோர் நடப்பு வருடத்தில் தங்களது ஆறு மாதங்களுக்கான சம்பளத்தொகையை காசாக பெற்றிருந்தனர், இத் தொகை ஊழியர் சம்பளக் கணக்கில் தவறாக வரவில் பதிவிடப்பட்டிருந்தது.

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

03. பங்காளர் சிவாவின் கடன்தொகை 01.10.2025 இல் இவரிடம் இருந்து பெறப்பட்டதாகும் இதற்கான இதற்கான நடப்பு வருட வட்டி 31.03.2026 இல் நிலுவையாகவுள்ளது.

04. 31.03.2026 இல் முடியும் ஆண்டின் இறுதி இரு மாதங்களுக்கான மின்கட்டணத் தொகை ரூ. 10 000 பங்காளர் அமரனின் சொந்த பணத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்த போதும் இது தொடர்பான பதிவுகள் வணிக ஏடுகளில் இடம்பெறவில்லை.

05. பங்காளர் பாலுவின் தனிப்பட்ட ஆயுள் காப்புறுதிக் கட்டணம் ரூ. 12 000 வணிக பணத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, இத்தொகை காப்புறுதி கட்டணக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

06. 2026 ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான வினம்பரக்கட்டணம் ரூ. 16 000 இது 31.03.2026 இல் முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது.

07. பங்காளர் அமரனால் வணிகத்தில் இருந்து எடுக்கப்பட்ட பொருள் பற்று ரூ. 40 000 ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

08. ரூ. 80 000 விற்பனைப்பட்டியல் ஒன்று உரிய ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

09. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்கு அதன் கிரயத்தில் வருடாந்தம் 10% நேர் கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடல் வேண்டும். (வணிகத்தின் ஆதனங்கள் அனைத்தும் நிர்வாக தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது)

10. பங்குடமை வணிகத்தால் வேறொரு வணிகத்திற்கு வழங்கப்பட்டுள்ள சேவைக்கான தரகுவருமானம் ரூ. 6 000 31.03.2026 இல் வருமதியாகவுள்ளது.

வேண்டப்படுவது:

(1) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமை வணிகத்தின் வருமானக் கூற்று (பகிர்வு உள்ளடங்கலாக)
(2) 31.03.2026 உள்ளவாறான நிதி நிலைக் கூற்று.
(3) பங்காளர் நடைமுறைக்கணக்கு (நிரல் வடிவில்) **(20 புள்ளிகள்)**

02. 01.04.2026 இல் சிவகுமரன் ரூ. 150 000 காசாக முதலீடு செய்து பல்பொருள் வாணிபம் ஒன்றை ஆரம்பித்தார். மேலும் அவர் இத்தினத்தில் ரூ. 80 000 பெறுமதியான கணிணி ஒன்றை வணிக பாவனைக்காக கொண்டுவந்தார். அவர் வணிகவங்கி ஒன்றில் வணிக பெயரில் வங்கி நடைமுறைக்கணக்கொண்றை ஆரம்பித்து சகல கொடுக்கல் வாங்கல்களையும் அதனூடாக மேற்கொண்டு வந்தார். ஏப்ரல் மாத கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:

கொடுக்கல் வாங்கல்கள் இல	**கொடுக்கல் வாங்கல்கள்**
1	பண்டங்கள் ரூ. 120 000 இற்கு காசிற்கு கொள்வனவு செய்யப்பட்டன.
2	ரூ 90 000 கிரயம் கொண்ட பண்டங்கள் ரூ. 120 000 இற்கு காசிற்கு விற்கப்பட்டன.
3	பண்டங்கள் 200 000 இற்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
4	ரூ. 150 000 கிரயம் பெறுமதியான பண்டங்கள் ரூ. 210 000 கடனுக்கு விற்கப்பட்டன.
5	ரூ.42 000 இற்கு விற்கப்பட்ட பண்டங்கள் வாடிக்கையாளரிடம் இருந்து திருப்பப்பட்டுள்ளன. இதன் கிரயம் ரூ. 30 000 அகும்.
6	அலுவலக உதவியாளருக்கான மாதச் சம்பளம் ரூ. 14 000 ற்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது.
7	சிவகுமரன் ஏப்ரல் மாதத்தில் வணிகத்தில் இருந்து சொந்த தேவைக்காக எடுத்துள்ள பண்டங்களினது கிரயம் ரூ. 6 000ஆகும்.
8	வணிகத்தின் கடன் தீர்ப்பதற்கு 10% கழிவு பெறப்பட்டபின்னர் சிவகுமரன் தனது சொந்தபணம் ரூ. 45 000 ஐ கடன்கொடுத்தோருக்கு செலுத்தியுள்ளார்.
9	வருமதியாளரது வருமதிக் கடன் முழுவதும் ரூ. 3 000 கழிவு அனுமதித்து முழு வருமதியும் காசாக பெறப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

10 ஏப்ரல் மாத ரூ. 8,000 மின்பட்டியல் தொகை ஏப்ரல் 30 இல் பெறப்பட்ட போதும் இப்பட்டியல் ஆனது 2026 மே 03 இல் செலுத்தப்பட்டிருந்தது.

11 வணிக்கத்தினது ஏப்ரல் மாத வாடகைக்கட்டணத்திற்கு ரூ. 10,000 காசோலை கொடுக்கப்பட்டுள்ளது, மேலும் 31.03.2026 இல் வாடகை நிலுவை ரூ. 5,000 காணப்பட்டது.

வேண்டப்படுவது:

(1) இல 1 முதல் 11 வரையான மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளை (பெறுமதியுடன்) கணக்கீட்டு சமன்பாட்டை பயன்படுத்திக் காட்டுவதோடு அதிகரிப்பை (+) எனவும் குறைவை (-) எனவும் எதிரே குறிப்பிடுக.

	சொத்துக்கள்				பொறுப்பு		உரிமையாண்மை
	ஆதனம் பொறி உபகரணம்	இருப்பு	கடன்பட்டோர்	காசுமீதி	கடன் சென்மதியாளர்	ஏனைய சென்மதி	
1 2							

(2) 2026 ஏப்ரல் மாத வருமானக் கூற்று: **(20 புள்ளிகள்)**

03. (அ) அமரன் தனி வியாபாரமானது தனது அனைத்து பெறுவனவுகளையும் வங்கி நடைமுறைக்கணக்கில் வைப்பிலிடுவதோடு கொடுப்பனவுகள் அனைத்தையும் காசோலை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அமரன் வணிகத்தினது 2026 மார்ச் மாத வங்கி கூற்று வருமாறு:

திகதி	விபரம்	வரவு	செலவு	மீதி
01.03	மீதி			120,000
04.03	காசோலை இல 104516		80,000	200,000
06.03	காசு வைப்பு		70,000	270,000
10.03	காசோலை இல 250314	110,000		160,000
12.03	கடன் தவணைப்பணம்	30,000		130,000
14.03	காசோலை இல 250315	50,000		80,000
15.03	நேரடி வைப்பு		90,000	170,000
20.03	காசோலை இல 750115		150,000	320,000
24.03	காசோலை இல 250317	160,000		160,000
30.03	வங்கிக் கட்டணம்	5,000		155,000
31.03	காசோலை இல 250313	45,000		110,000
31.03.	மறுத்த காசோலை 250313		45,000	155,000

மேலதிக தகவல்கள் வருமாறு:

- 2026 மார்ச் மாத வைப்புக்கள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய விபரம்:

வைப்புக்கள்		**கொடுப்பனவுகள்**	
விபரம்	**தொகை(ரூ.)**	**விபரம்** (காசோலை இல)	**தொகை(ரூ.)**
காசு வைப்பு	70,000	தளபாடம் 250314	110,000
காசோலை வைப்பு 750115	150,000	கொள்வனவு 250315	50,000
காசோலை வைப்பு 400516	90,000	வாடகை 250316	30,000
		கணிணி 250317	160,000
		மின்கட்டணம் 250318	15,000

- 104516, 210307 ஆகிய இலக்கங்களை கொண்ட இரு காசோலைகள் முறையே ரூ. 80,000, ரூ. 20,000 பெறுமதியுடையவைகள் பெப்ரவரி 28 வரை வசூலிக்கப்படாமல் இருந்ததோடு, 250313 இலக்கமுடைய ரூ. 45,000 பெறுமதியான காசோலை 28 பெப்ரவரி வரை மாற்றப்படாமல் காணப்பட்டது.
- பெப்ரவரியில் மாற்றப்படாமல் இருந்த காசோலை மார்ச்சில் வங்கியால் மறுக்கப்பட்டிருந்தது

வேண்டப்படுவது:

(i) 2026 மார்ச் மாத காசுகட்டுப்பாட்டுக்கணக்கு

(ii) திருத்திய மார்ச் மாத காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

(iii) மார்ச் மாத வங்கி கணக்கிணக்கற் கூற்று.

(15 புள்ளிகள்)

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

Past Papers Wiki

(ஆ) ஆரத்தி வணிகமானது 01.03.2026 இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வணிகமாகும், இவ் வணிகம் தொடர்பான 2026 மார்ச் மாத தகவல்கள் வருமாறு:

(i) **கடன் விற்பனை மற்றும் கடன் கொள்வனவுகள் தொடர்பானவைகள்:**

வாடிக்கையாளர்		**வழங்குனர்**	
பானுவிற்கு விற்பனை	ரூ. 385,000	கமலிடம் கொள்வனவு	ரூ. 330,000
சிறிற்கு விற்பனை	ரூ. 550,000	நிமலிடம் கொள்வனவு	ரூ. 275,000

(ii) வணிகத்தினது அனைத்து கடன் விற்பனைகளும் கடன் கொள்வனவுகளும் 10% Vat உள்ளடக்கியவகையில் இடம்பெற்றுள்ளன.

(iii) காசு பெறுவனவு நாளேட்டு விபரம்:

திகதி	**விபரம்**	**கழிவு**	**தொகை**	**பகுப்பாய்வு**		
				விற்பனை	**கடன் பட்டோர்**	**vat**
05.03.2026	விற்பனை		440,000	400,000		40,000
08.03.2026	பானு	30,000	270,000		270,000	
15.03.2026	விற்பனை		176,000	160,000		16,000
28.03.2026	சிறி	40,000	360,000		360,000	
		70,000	**1246,000**	**560,000**	**630,000**	**56,000**

(iv) காசு கொடுப்பனவு நாளேட்டு விபரம்:

திகதி	**விபரம்**	**கழிவு**	**தொகை**	**பகுப்பாய்வு**		
				கொள்வனவு	**கடன் கொடுனர்**	**vat**
01.03.2026	கொள்வனவு		90,000	90,000		
09.03.2026	கொள்வனவு		165,000	150,000		15,000
11.03.2026	கமல்	20,000	180,000		180,000	
26.03.2026	நிமல்	10,000	190,000		190,000	
		30,000	**625,000**	**240,000**	**370,000**	**15,000**

வேண்டப்படுவது: பொதுப்பேரேட்டில் பின்வரும் கணக்குகள்

(i) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(ii) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(iii) vat கட்டுப்பாட்டு கணக்கு

(iv) கொள்வனவு மற்றும் விற்பனைக்கணக்குகள் **(5 புள்ளிகள்)**

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. சுந்தர் வணிகத்தின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 320,000 ஆக காணப்பட்ட போது, கொள்வனவு பேரேட்டு கணக்குகளின் மொத்தம் வேறு ஒரு தொகையாக காணப்பட்டது. இதனை ஆராய்ந்த போது கண்டறியப்பட்ட விடயங்கள் வருமாறு:

- ரூ. 15,000 பெறுமதியான ஆன வரவுத்தாள் ஒன்றிற்கான பதிவு உரிய நபருடைய கணக்கில் ரூ. 5,000 பதிவிடப்பட்டிருந்தது.
- பெற்ற கழிவு நிரல் மொத்தம் ரூ. 20,000 கட்டுப்பாட்டு கணக்கில் செலவு பக்கம் பதிவிடப்பட்டிருந்தது. எனினும் இது உரிய கழிவு கணக்கில் சரியாக பதியப்பட்டிருந்தது.
- கொள்வனவு நாளேட்டு மொத்தம் ரூ. 210,000 ஆனது உரிய ஏடுகளில் 120,000 என பதிவிடப்பட்டிருந்தது.
- சென்மதியாளர் ஒருவருடைய கணக்கு செலவுமீதி ரூ. 6,000 உரிய பட்டியலுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.
- வெளித்திரும்பல் நாளேட்டின் மொத்தம் ரூ. 45,000 வெளித்திரும்பல் கணக்கில் மட்டும் பதிவிடப்பட்டிருந்தது.
- தாமதக்கடன் ஒன்றிற்காக சென்மதியாளரால் வணிக நிறுவனத்திற்கு விதித்த வட்டித்தொகை ரூ. 12,000 பொதுப் பேரேட்டில் உரிய கணக்குகளில் ரூ. 2,000 ஆக பதிவிடப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:

(i) வழுக்கள் திருத்தம் செய்தலுக்கான நாட்குறிப்பு பதிவுகள்.

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

Past Papers Wiki

(ii) திருத்திய கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு.

(iii) பட்டியல் மீதியுடன் இணக்கம் செய்யும் கூற்று **(20 புள்ளிகள்)**

05. **(அ)** ருத் தனிவியாபாரின் 31.03.2026 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படாமையால் தொங்கல் மீதி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது, குறித்த பரீட்சை மீதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வருமானக் கூற்றில் கிடைக்கப்பெற்றுள்ள ஆண்டு இலாபம் ரூ. 350,000 ஆக காணப்பட்டது. ஆய்வின் போது கீழே தரப்படும் வழுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- 31.03.2026 இல் காணப்பட்ட நிலுவை வாடகைத் தொகை ரூ. 30,000 சென்மதி வாடகைக்கணக்கில் பதியப்பட்ட போதிலும் வாடகைக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை,
- விற்பனை திரும்பல் தொகை ரூ. 20,000 இது விற்பனை நாளேட்டில் பதியப்பட்டிருந்தது.
- வருமதியாளரிடம் இருந்து பெறப்பட்ட காசுத்தொகை ரூ. 55,000 இது கடன் கொடுத்தோர் கணக்கில் செலவில் ரூ. 5,000 ஆக பதிவிடப்பட்டிருந்தது.
- நிலையான வைப்பு வட்டி வருமானக் கணக்கு மீதி ரூ. 15,000 இது பரீட்சை மீதிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

வேண்டப்படுவது:

(i) வழுக்களை திருத்தம் செய்யும் தொங்கல் கணக்கு

(ii) பிழையான இலாபத்தை சீராக்கும் கூற்று **(10 புள்ளிகள்)**

(ஆ) விளையாட்டுக்கழகமொன்று 31.12.2025 இல் முடிவடையும் வருடத்தில் 80 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

பின்வருவன 31.12.2025 இல் முடிந்த வருடத்திற்காக கழகத்தினால் பெறப்பட்ட காசு தொடர்பான விபரம் வருமாறு:

நடைமுறை ஆண்டில் பெற்ற சந்தா	ரூ. 72,000
பெறப்பட்ட ஆயுள் அங்கத்துவ கட்டணம்	ரூ. 60,000
விளையாட்டு உபகரணம் கொள்வனவு தொடர்பாக பெறப்பட்ட நன்கொடை நிதி	ரூ. 800,000
நடப்பு வருடத்தில் பெறுமானத் தேய்வு நீங்கலாக செலுத்தியுள்ள செயற்பாட்டு செலவுகள்	ரூ. 65,000
நடப்பு ஆண்டில் பெறப்பட்ட ஆயுள் அங்கத்துவ நிதி	ரூ. 60,000

மேலதிக தகவல்கள்:

- நடப்பு வருடத்தினுள் பெற்ற சந்தா தொகையினுள் 2024 ற்காக பெறப்பட்ட சந்தா தொகை ரூ. 8,000 மற்றும் 2026 ற்காக பெறப்பட்ட சந்தா தொகை ரூ. 5,000 ஆகியன உள்ளடங்கியுள்ளன. அத்தோடு 31.12.2025 இல் உள்ளவாறான சந்தா நிலுவைகள் ரூ. 21,000 ஆகும்.
- ஆயுள் அங்கத்துவ நிதி திட்டம் 01.01.2025 இல் அறிமுகப்படுத்தப்பட்டு அத்தினத்தில் காசு பெறப்பட்டுள்ளது, இந்நிதியானது பெறப்பட்ட வருடத்தில் இருந்து 5 வருடத்திற்கு சமமான தொகையில் வருமானமாக இனம் காண்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- விளையாட்டு உபகரணம் சார்பான நன்கொடையானது, அது பெறப்பட்ட வருடத்தில் இருந்து 4 வருடகாலத்திற்கு சமமான தொகை வருமானமாக இனம் காணப்பட வேண்டும் என்பது கழக கொள்கையாகும்.
- விளையாட்டு உபகரணங்களின் நடப்பு வருடத்திற்கான பெறுமானத் தேய்வு ரூ. 35,000 ஆகும்.
- இரு வருடகால முதிர்வைக் கொண்டுள்ள 14% நிலையான வைப்பு ஒன்றில் ரூ. 200,000 காசு 01.07.2025 இல் முதலீடு செய்யப்பட்டு நிலையான வைப்புக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- 01.01.2025 இல் உள்ளவாறான காசு மீதி மற்றும் திரண்ட நிதி ஆகியன முறையே ரூ. 53,000, ரூ. 98,000 ஆகும்.

வேண்டப்படுவது:

(i) 31.12.2025 இல் முடிந்த வருடகால வருமான செலவுக் கூற்று.

(ii) 31.12.2025 இல் முடிந்த வருடகால காசுக் கணக்கு

(iii) 31.12.2025 இல் உள்ளவாறான உரிமைத்துவப் பெறுமதி(தனிதனியாகத்தருக)

(10 புள்ளிகள்)

[All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது]

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. சிறுவர் விளையாட்டுப் பொம்மைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் **பிறேம்** வணிகத்தின் 31.03.2026 இல் முடிந்த ஆண்டிற்கான தகவல்கள் வருமாறு:

விற்பனைகள்	ரூ. 1100,000
மூலப்பொருள் கொள்வனவு	ரூ. 450,000
உற்பத்திக் கூலி	ரூ. 100,000
கட்டட வாடகை	ரூ. 200,000
வடிவமைப்புக் கட்டணம்	ரூ. 80,000
மின்கட்டணம்	ரூ. 150,000
நேரில் பொருட்கள் கொள்வனவு	ரூ. 50,000
உட்சுமை கூலி - மூலப்பொருட்கள்	ரூ. 60,000

மேலதிக தகவல்கள்:

(i) இருப்புக்கள் தொடர்பான விபரம்:

வகை	**31.03.2025(ரூ.)**	**31.03.2026(ரூ.)**
மூலப்பொருள்	120,000	80,000
குறைவேலை	40,000	70,000
முடிவுப்பொருள்	150,000	200,000

(ii) 31.03.2026 இல் முடிந்த வருடகாலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொம்மைகளின் எண்ணிக்கை 1000 ஆகும்.

(iii) உற்பத்தி அலகு ஒன்றினது உற்பத்திக் கூலி மற்றும் வடிவமைப்புக்கட்டணம் ஆகியன ரூ. 110, ரூ. 60 ஆகும்.

(iv) ஆண்டுகாலத்தில் மூலப்பொருட்களில் ரூ. 30,000 கிரயமானவை அழிவடைந்துள்ளன.

(v) கட்டட வாடகையில் 50% ஆனவை தொழிற்சாலைக்கும் மிகுதி நிர்வாகப்பகுதிக்கும் உரியது.

(vi) மின்கட்டணத் தொகையில் 1/3 பகுதி நிர்வாகப்பகுதிக்கும் மிகுதியானவை தொழிற்சாலைக்கும் பங்கிடப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது:

(அ) உற்பத்திக்கிரயக் கூற்றைத் தயாரித்து பின்வருவனவற்றை கணிப்படுக:

01. மூலக்கிரயம் ?
02. உற்பத்திக்கிரயம் ?
03. அலகு ஒன்றிற்கான உற்பத்திக் கிரயம் ?

(ஆ) விற்பனைக்கிரயம் யாது?

(இ) மொத்த இலாபம் யாது? **(20 புள்ளிகள்)**

*****

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library